
# மூத்த கலைஞர் நவாலியூர் நா.செல்லத்துரை

## ஆழித்து முத்துக்கள் 142

- தெளிவத்தை ஜோசப் -

அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக நாடகத்துறையில் பணியாற்றும் மூத்த கலைஞர் நவாலியூர் நா. செல்லத்துரை அவர்கள்.

நவாலியூரான் என்றே பெரும்பாலும் அழைக்கப் படும் நா.செல்லத்துரை அவர்கள் 06.01.1929ல் நவாலியில் பிறந்தவர். மிக இளம் வயதி லேயே கலைத்துறையில் அதீத ஈடுபாடு கொண்டிருந்த இவர், வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரி, கொழும்பு சென்.ஜோசப் கல்லூரி, கொழும்பு கத்தீட்ரல் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்று மேற்படிப்புக்



காக சென்னைக் கலைக்கல்லூரியை தெரிவு செய்து கொண்டவர்.

சென்னை கலைக்கல்லூரியில் கற்று கலை மாணி (சிறப்பு) பட்டம் பெற்றவர். கலை செயற்பாடுகளில் இவர் புடம்படுத்தப்பட்ட காலம் இந்த கலைக் கல்லூரிக் காலமே என்பது மிகைக் கூற்றல்ல.

1951ல் கொழும்பு சென் ஜோன்ஸ் ஆங்கி லப் பாடசலையில் மேடையேற்றப்பட்ட 'சர் வாதிகாரி' என்னும் நாடகமே இவர் மேடை யேறிய முதல் நாடகம்.

சர்வாதிகாரியில் பிரதான பாத்திரமேற்று நடித்த செல்லத்துரை அவர்கள் அன்றிலி ருந்தே நாடகத்துறையைத் தன் உயிர் மூச் சாகக் கொண்டு வாழ்ந்தவர். நூற்றுக்கு மேற்பட்ட நாடகங்களை எழுதி நெறிப்ப டுத்தி தயாரித்து மேடையேற்றி நடித்துப் புகழ் பெற்றவர்.

1952லேயே வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்களால் 'புதுமைநடிகன்' என்று பட்ட மளித்துக் கௌரவிக்கப்பட்டவர்.

கண்டி திருத்துவக் கல்லூரி, ஹட்டன் ஹைலன்ட்ஸ் கல்லூரி ஆகியவற்றில் ஆசி ரியராகப் பணியாற்றியபோது சக ஆசிரியர் களையும் மாணவர்களையும் கலை இலக் கியத்தில் ஈடுபாடு கொள்பவர்களாக மாற்றிக் காட்டியவர். மலையக நாடகத்துறையின் மறுமலர்ச்சிக்கு இவரது பங்கும் பணியும் கணிசமானது.

ஹைலன்ட்ஸ் கல்லூரியில் இவர் பணியாற் றிய பிந்திய அறுபதுகளில் இவருடைய முதல் நூல், அதுவும் ஒரு நாவல் 'முகை வெடித்த மொட்டு' வெளிவந்தது. மாண வர்களின் எழுத்து, வாசிப்பு என்னும் இலக்கிய உட்செல்கைக்கு இது ஒரு உந்து சக்தி யாகத் திகழ்ந்தது. இவர் எழுதி, மாண வர்களைக் கொண்டு பயிற்றுவித்து மேடை யேற்றிய பெருவாரியான கல்லூரி நாடகங் கள் மாணவர்களை அரங்கியல் ஈடுபாட் டாளர்களாக்கியது.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் 1976ல் தொடங்கிய நாடகக் கல்வித் தகைமைச் சான்றிதழ் பாட நெறியில் இணைந்து பட்டம் பெறுவதற்கான வழி முறைகள் வாய்ப்புக் கள் ஆகியவற்றிற்கு நவாலியூராரின் அரங் கியல் அனுபவமும் செயற்பாடுகளும் கார ணமாகின.

கண்டி திரித்துவக் கல்லூரியில் ஆசிரியரா கவும், பிறகு தமிழ்ப் பிரிவுத் தலைவராக வும் இவர் பணியாற்றிய காலங்கள் மலை யக நாடகத்துறை பெரு வளர்ச்சி பெற்று வந்த காலமாகும்.

நா. செல்லத்துரை அவர்களின் கூடுதலான நாடகங்களுக்கு களமமைத்துக் கொடுத்த பெருமை கண்டி திரித்துவக் கல்லூரிக்கு உண்டு.

அன்று இவருடைய மாணவர்களாயிருந்து இன்று மலையக இலக்கியம் அரசியல், அரங்கியல், கல்வி போன்ற துறைகளில் பெரியவர்களாய்த் திகழும் பல நண்பர்கள் இவரைப் பற்றி குறிப்பிடும்போது, 'வகுப்புக்கு வரும்போதும் வகுப்பில் இருந்து போகும் போதும் ஒரு நடிகரைப் போலவே ஒரு மிடுக் குடன் நடந்து போவார், நடந்து வருவார்... அதுவும் குறிப்பாக சிவாஜி நடை..' என்று கூறுவதுண்டு.

அரங்கியல், நடிப்பு, நாடகம், என்பவை இவ ருடைய உயிர் மூச்சாக இருந்துள்ளது என் பதை மறுக்க முடியாது.

கண்டி கலா ரசிகர் மன்றம் 1983ல் 'சர்வ கலா வல்லவன்' என்ற பட்டம் வழங்கி இவரை கௌரவித்துள்ளது.

1976ல் அகில இலங்கைத் தமிழ்க் கலைஞர் பேரவை இவருடைய ஆறு ஓரங்க நாடகங் களைத் தொகுத்து 'உலகம் எங்கள் கைக ளிலே' என்னும் பெயரில் ஒரு நூலாக வெளியிட்டுள்ளது.

1999ல் 'சின்னவனா பெரியவனா' என்னும் சிந்து நடைக் கூத்து நூலும் 2008ல் கற் பனை கலந்த இலக்கிய நாடக நூலான 'சிலப்பதிகாரத்தில் சிலை எடுத்த சேரன்' எனும் நூலும் வெளிவந்துள்ளன.

இம்மூன்று நாடக நூல்களும் அரங்கியல் துறையில் இவரின் ஈடுபாட்டையும் நூற்றுக் கும் மேற்பட்ட இவர் எழுதி இயக்கிய நாட கங்கள் இவரது அரங்கியல் ஆளுமையை யும் பறைசாற்றுபவை.

கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் 1980ல் இவருக்கு 'கலைமதி' என்ற பட்டத்தையும் இலங்கை கலாசார அமைச்சு 1998ல் கலா பூஷணம் விருதினையும் இலங்கைக் கலைக் கழகத்தின் தேசிய நாடக சபை 2004ல் 'முதுகலைஞர்' விருதினையும் 2005ல் கலைப் பேரரசு ஏ.டி. பொன்னுதுரை நினைவு விருது சபை 'கலைப்பேரரசு' விருதினையும் வழங்கி நவாலியூர் நா. செல்லத்துரை அவர்களைக் கௌரவித்துள்ளன.

வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் ஆளுனர் விருது உட்பட பல விருதுகள் பெற்றவர் இந்த 86 வயது முது கலைஞர்.

வாழும் கலைஞர்களை கௌரவிக்கும் அமைப்பு இவருடைய பவளவிழாவினைக் கொண்டாடி நவாலியூரான் பவளவிழா மல ரையும் வெளியிட்டது (2004).

'நவாலியூரானின் கலை இலக்கியப் பணி கள்' என்னும் ஆய்வு நூலினை வி.பி.தனேந் திரா அவர்கள் 2008ல் வெளியிட்டுள்ளார்.

இலங்கைத் தமிழ்த் திரைப்படத்துறைக்கும் நவாலியூராரின் பங்களிப்பு கணிசமானதே.

1977ல் ஜெய்ந்திரா மூவிஸ் வெளியிட்ட 'காத் திருப்பேன் உனக்காக' என்னும் திரைப்ப டத்தின் திரைக்கதை வசனம் இவருடையது.

தயாரிப்பாளர்களான மூன்று சகோதரர்களில் ஒருவரான ஜெய்ராஜ் அவர்களுடைய கதை தான் திரைப்படத்தின் மூலக்கதை.



கண்டியைச் சேர்ந்த இவர்கள் தங்கள் குரு நாதரான நவாலியூர் நா. செல்லத்துரை அவர்களிடம் திரைக்கதை வசனம் எழுதும் பொறுப்பை ஒப்படைத்ததில் வியப்பேது மில்லை.

திரைக்கதை வசனங்களை எழுதியதுடன் ஒரு தந்தையின் பாத்திரத்தையும் ஏற்றிருந் தார் இவர்.

கண்டியில் இருந்து வெளிவந்த ஒரு முக்கி யமான மலையகப் பத்திரிகை 'செய்தி' அதன் ஆசிரியர் ரா.மு.நாகலிங்கம் அவர்கள். அவருடைய மகன் சிவராம். அவர் தான் படத்தின் கதாநாயகன்.

கலை இலக்கிய உலகில் நவாலியூர் நா. செல்லத்துரை அவர்களுக்கு ஒரு அழியாத இடம் என்றுமுண்டு.



theliwathai.joseph@thaiveedu.com


## உங்களுக்குத் தெரிந்த கலைஞர்கள் பற்றி நீங்களும் எழுத வேண்டுமா?

கலைஞர்கள் பற்றிய விபரங்கள், அவர்களுடைய புகைப்படங்களுடன்
உங்களுடைய பெயர், தொலைபேசி எண், புகைப்படம்
மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டுக்கு அனுப்பிவையுங்கள்.

**Thaiveedu**
**Woodside Square, P.O.Box #63581**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**